DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : STC.No.329/2022 | Deposition of Witness for : PW2 |
| Name : வள்ளியம்மாள் | Father/Husband Name : ஆறுமுகநயினார் |
| Age : 64 | Village : கொமந்தான் நகர் |
| Taluk : | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 November 2025.
Accused absent. Petition filed and allowed.

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் தற்போது கொமந்தான்நகரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், என்னுடைய கணவர் ஆவார். எதிரியை தெரியும். எங்கள் வயலுக்கு அருகில் உள்ளவர்.

2. கடந்த 29.07.2018 அன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் எங்கள் தோட்டத்தில் உளுந்து நெத்து அடித்துக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த எதிரி பென்சிங் கம்பி வேலியை உடைத்து எறிந்துவிட்டார். என்னுடைய கணவரைப் பார்த்து எதிரி தேவடியா மகனே என்று கெட்ட வார்த்தையால் ஏசினார். பக்கத்தில் வேறு யாரும் இல்லை, சத்தம் கேட்டு பாப்பா என்பவர் வந்து சண்டையை விலக்கிவிட்டார். மேலும் எதிரி வா பார்த்துக்கொள்கிறேன், நீ செய்கிறதை செய் என்று சொல்லி எங்களை மிரட்டி விட்டு சென்றார். இதுசம்பந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

3. என்னுடைய ஊர் கொமந்தான் நகர் என்றால் சரிதான். எங்களுடைய தோட்டம் சுப்ரமணியபுரத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் பற்றி போலீசாருக்கு எப்படி தகவல் கொடுக்கப்பட்டது என்றால் 3.30 மணியளவில் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க அ.சா.1 சென்றார். எதிரி ஜெபராஜ் என்பவருக்கு திக்குவாய் என்றால் சரிதான். எதிரியால் கோர்வையாக ஒரு வரியை பேச முடியாது என்றால் அவருக்கு திக்குவாய் உள்ளது, ஆனால் நன்றாக பேசுவார்.

4. எதிரி கம்பிவேலியை எப்படி சேதப்படுத்தினார் என்றால் கம்பி வேலியை மிதித்து சேதப்படுத்தினார் மற்றும் கையை வைத்து சேதப்படுத்தினார்.

5. ஏற்கனவே அந்த கம்பி வேலை உடைந்திருந்தது என்றும் எதிரி வீட்டில் உள்ள ஆடு அந்த கம்பி வேலிக்குள் உள்ளே நுழைந்ததால் நான் கல்லை எடுத்து அந்த ஆட்டின் மேல் வீசினேன், அதனை எதிரி தட்டிக்கேட்ட போது ஏற்பட்ட பிரச்சனையில் இருந்து என்னை காப்பாற்றுவதற்காக எதிரி மீது

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.11.07 17:58:23 +0530

பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, ஆடு எதுவும் எங்களுடைய வயலுக்குள் வரவில்லை.

6. அ.சா.1 என்னுடைய கணவர் என்பதாலும், அவர் புகார் அளித்துள்ளதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.11.07 17:58:28 +0530

Judicial Magistrate, Sathankulam.